**மெதகம பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**
---------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 23 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மெதகம பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 தேறிய சொத்துக்களின் குறைவு**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய சொத்துக்களின் குறைவு ரூபா 49,391,081 ஆக இருந்தது.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 16,220 தொகையான செலவினத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எரிபொருள் மற்றும் நீரைப் பெறுவதற்கு பாதுகாப்பு பிணை வைப்பாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 72,500 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாது முதலீட்டின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 34,513,413 கூட்டுத்தொகையான 02 சொத்து விடயங்களையும், ரூபா 18,622,635 தொகையான பொறுப்பு விடயத்தையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | |
| (i) | 19(1)(1) ஆம் பிரிவு | உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரமின்றி தொழிலாளர் பதவிக்காக இரண்டு நபர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 114,290 தொகை சம்பளம் மற்றும் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 132(ஏ) மற்றும் (ஒ) பிரிவுகள் | சபையினால் பல்வேறு செயற்பாடுகளுக்காகவும் நிர்மாணங்களுக்காகவும் சபை நிதியத்திலிருந்து ரூபா 300,810 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,962,415 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,981,372 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,497,810 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

**2.2.1** மாகாணசபை நிதியேற்பாட்டின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மெதகம நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தில் 05 கடைகள் திகதி குறிப்பிடப்படாமல் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் வாடகைக்கு விடாமையினால் மீளாய்வாண்டில் ரூபா 408,600 தொகையான மதிப்பீட்டு வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 வாடகை

சபைக்குச் சொந்தமான வாராந்த சந்தை, நன்னீர் மீன் கடை மற்றும் 01 ஆம் 02 ஆம் இலக்க கடல் மீன் கடைகளின் வாடகை உடன்படிக்கையின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் குறிப்பிட்ட வாடகைத் தவணைப் பணம் அந்தந்த மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் சபைக்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாதிருந்த வாடகையாளர்களிடமிருந்து தாமதக் கட்டணம் ரூபா 289,282 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 873,382 |
| முத்திரைக் கட்டணம் | 380,149 |

### 2.3 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 43,923 தொகை அறவிடவேண்டியிருந்தது.

### 2.4 ஒப்பந்த நிருவாகம்

பக்கினிகஹவெல கீனகொடை கனிஷ்ட வித்தியாலயத்திற்கு நீரை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 60,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு இந்த வேலை கையளிக்கப்பட்டு நிர்மாணிப்பதாக 2013 ஏப்ரல் 18 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் இந்த நிர்மாணம் செய்ய முடியாதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பிரதேசத்தில் ஏனைய பதிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புக்களின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மெதகம பிரதேச சபையின் மூலம் பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைத்த மானியங்களின் அடிப்படையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 3,765,979 தொகை செலவிடப்பட்டிருந்தது. கூட்டுப்பசளை தயாரிப்பதற்கு பொருத்தமான கழிவுப் பொருள் சேகரிக்கப்படாமையின் காரணமாக கூட்டுப்பசளை தயாரிக்கும் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தமை 2014 பெப்ரவரி 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு